செ.வெ. எண் 629 நாள் 26-07-2010

**ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாடநூல் குறித்து**
**26–7–2010 அன்று ஒரு நாளிதழில் வெளியான செய்திக்கு**
**தமிழ்நாட்டுப் பாட நூல் கழகத்தின் விளக்கம்.**

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் மூலம் சமச்சீர்க் கல்வித் திட்டத்தின்கீழ் ஒன்றாம் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்பு பாடத் திட்டங்களுக்கான பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மெட்ரிகுலேஷன் உள்ளிட்ட ஆங்கிலப் பள்ளிகளுக்கும் இதே பாடநூல்கள் அவர்களின் தேவைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டன. மெட்ரிகுலேஷன் உள்ளிட்ட ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்ப் பாடநூல்களைத் தனியாகக் கோரினாலும் அவர்களுக்கும் அந்நூல்கள் தடையின்றி வழங்கப்படுகின்றன.

தற்போது, தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தினுடைய கட்டுப்பாட்டில் உள்ள 21 வட்டார அலுவலகங்களிலும் தேவையான அளவுக்கு ஆறாம் வகுப்புக்குரிய தமிழ்ப் பாடநூல்கள் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், சென்னை கல்லூரிச் சாலையில் உள்ள ஈ.வி.கே. சம்பத் மாளிகையில் செயல்படும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் விற்பனை மையத்தில் மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட அனைவரும், தங்களுக்குத் தேவைப்படும் எண்ணிக்கையில் ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாடநூல்களை காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் தடையின்றிப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்படுகிறது.

26/7/2010

நாள். 26/7/2010

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருக்காக.
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்.
சென்னை-6

...யீடு, இயக்குநர்,
...யதி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9